
தினமணி

**அதிக லாபம் தரும் சர்க்கரைக் கிழங்கு சாகுபடி**

ஜி.சுந்தரராஜன்

First Published : 11 Nov 2010 12:14:04 AM IST



சிதம்பரம்: தமிழகத்தில் நெற் பயிருக்கு போதிய விலை கிடைக்காததால் அதற்கு மாற்றாக தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்வதில் தற்போது தமிழக விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் தோட்டக்கலை பயிரான சர்க்கரைக் கிழங்கு சாகுபடி செய்து விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலை. தோட்டக்கலைத் துறை முனைவர் ப.மதனகுமாரி தெரிவித்தது:

சர்க்கரைக் கிழங்கு பயிரானது பார்ப்பதற்கு முள்ளங்கி செடிபோல தோன்றும் ஒரு கிழங்கு வகைப்பயிர். இக்கிழங்கில் 12 முதல் 15 சதவீதம் வரை சர்க்கரை சத்து உள்ளது. உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையில் 45 சதவீதம் இப்பயிரிலிருந்து பெறப்படுகிறது.

இப்பயிர் சம தட்பவெப்ப நிலை உள்ள தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சாகுபடி செய்யலாம். இதற்கு நீர்தேவை குறைவு. வெப்ப மண்டல பகுதிகளுக்கு ஏற்ற ரகங்களான பசோடா, ஹெச்.ஐ. 0064 மற்றும் டோராடி என்ற ரகங்களை விவசாயிகள் பயிரிடலாம். தற்போது சர்க்கரைக் கிழங்கு விதைகள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து சில விதை நிறுவனங்கள் விதைகள் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளன.புரட்டாசி-ஐப்பசி மாதங்கள் (குளிர்காலம்) இப்பயிரைப் பயிரிடும் பருவங்களாகும். 6.5 முதல் 8.5 கார அமிலத்தன்மை உள்ள மண் வகைகள் மிகவும் ஏற்றவை. களர் மற்றும் உவர் நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு 20 ஆயிரம் விதைகள் (600 கிராம்) கொண்ட 2 பைகள் தேவைப்படும்.

விதைப்பு: விதைக்கு விதை 20 செ.மீ. இடைவெளி விட்டு குழிக்கு ஒரு விதை வீதம் 2 செ.மீ. ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும். மண் பரிசோதனை செய்து உரமிடல் வேண்டும். மண்

பரிசோதனை செய்ய வாய்ப்பு இல்லாத நிலையில் ஏக்கருக்கு தொழுஉரம் 10 ஆயிரம் கிலோ, தழைச்சத்து 30 கிலோ, மணிச்சத்து 24 கிலோ, சாம்பல் சத்து 24 கிலோ ஆகியவை அடியுரமாக இட வேண்டும். மேலும் விதைத்த 30-வது நாளில் முதல் மேலுரமாக தழைச்சத்து 15 கிலோவும், விதைத்த 60-வது நாளில் இரண்டாம் மேலுரமாக 15 கிலோ தழைச்சத்தும் இடவேண்டும்.

களை நிர்வாகம்: பெண்டிமெத்லின் (15 லிட்டர் ஸ்டேம்ப்) களைக்கொல்லியை 300 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3-வது நாளில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். விதைத்த 25-வது நாளிலும், 50-வது நாளிலும் கைகளால் மண் அணைக்க வேண்டும்.

நீர் நிர்வாகம்: களிமண் கலந்த மண் வகைகளுக்கு 8-10 நாள்களுக்கு ஒரு முறையும், வண்டல் மண் சார்ந்த மண் வகைகளுக்கு 5-7 நாள்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைகளை விதைக்கும் முன்பு மண்ணில் போதுமான ஈரம் இருத்தல் அவசியம்.

நோய் மேலாண்மை: இலைப்புள்ளி நோய், அடிச்சாம்பல் நோய், பூசாரியம் மஞ்சள் இலை நோய் மற்றும் செடி அழுகல் நோய் ஆகியன தாக்கலாம். நோய்களை கட்டுப்படுத்த ஊடுருவும் பூஞ்சான நோய் தடுப்பு மருந்துகளை இரண்டு முறைகள் 3-வது மற்றும் 5-வது வாரத்தில் தெளிக்க வேண்டும்.

அறுவடை: சர்க்கரைக் கிழங்கு ரகத்தின் சராசரி வயது 5 முதல் 6 மாதம். முதிர்ந்த செடியில் அடியிலுள்ள வெள்ளி அடுக்கு கீழ் இவைகள் வெளிறிய மஞ்சள் நிறம் அடையும் போது அறுவடை செய்யலாம். சர்க்கரை மானி (பிரிக்ஸ் மீட்டர்) மூலம் சர்க்கரை சத்து 15-18 விழுக்காடு வந்தவுடனும் கிழங்குகளை அறுவடை செய்யலாம்.

பயன்கள் மற்றும் முக்கியத்துவம்: எரிசக்திக்கு பயன்படும் எத்தனால் எடுக்க மூலப்பொருளாக பயன்படுகின்றது. சர்க்கரைக் கிழங்கின் கழிவுப் பொருள்களான இலைகளையும் மற்றும் கிழங்கு கூழையும் மாட்டுத் தீவனமாக உபயோகிக்கலாம்.

எரிசக்தியின் தேவை அதிகரித்த இன்றைய நிலையில் இக்கிழங்கில் இருந்து கிடைக்கும் எத்தனால் மூலம் சுமார் 12 ஆயிரம் கோடி அளவுக்கு அன்னிய செலாவணி மீதப்படுத்தலாம். எத்தனால் தேவை எப்போதும் இருப்பதால் சர்க்கரை ஆலைக்கு தொடர்ந்து மூலப்பொருள்கள் கிடைத்து ஆலைகள் தொடர்ந்து செயல்பட வாய்ப்பும் உள்ளது.

**மூலிகைகளின் ராணி "துளசி'**

எஸ்.முகமது கவுஸ்

First Published : 11 Nov 2010 12:13:29 AM IST

திருவள்ளூர் : மூலிகைகளின் ராணி என பெயர் பெற்ற துளசியை பயிரிடும் விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு

6 ஆயிரம் தோட்டக்கலை துறை சார்பில் வழங்கப்படுகிறது.
வைட்டமின் ஏ, சி, கால்சியம் சத்துக்கள் அதிகளவில் இருக்கும் துளசியில் இருந்து எடுக்கப்படும் எண்ணெயில் இருந்து கொசு விரட்டி, கிருமி நாசினி, தலைவலி, தொண்டைப் புண், அஜீண கோளாறு, வயிற்றுப்போக்கு மலேரியா போன்றவற்றுக்கு நிவாரணம் அளிக்கும் பல்வேறு மருந்துகள் தயாரிப்பதால் மூலிகைகளின் ராணி என்ற பெயர் துளசிச் செடிக்கு உண்டு.


நடவு முறை:பொதுவாக விதைகள் மூலம் துளசி உற்பத்தி செய்யப்படும். மேட்டுப் பாத்தியல் முறையில் விதைகள் தூவி நாற்றங்கால் அமைக்க வேண்டும். 8 முதல் 10 நாளில் விதை முளைத்து வரும். 6 வாரங்கள் தயாரான நாற்றுக்களை 40 செ.மீ. ஷ் 40 செ.மீ. என்ற இடைவெளியில் நடவு செய்து மாதத்துக்கு இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. இதற்கு மக்கிய தொழு உரம், மண்புழு உரம் மட்டுமே போதுமானது.
அறுவடை: எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மைக் கொண்ட துளசிச் செடியின் முதல் அறுவடை 90 முதல் 95 நாளிலும், அடுத்ததாக 60 முதல் 75 நாளிலும் அதை தொடர்ந்து ஆண்டுக்கு 3 முறை என்ற கணக்கில் அறுவடை செய்யலாம். எண்ணெய் எடுக்க அறுவடை செய்யும் போது பூக்கும் தருவாயில் அறுவடை செய்ய வேண்டும். அப்போது ஒரு ஹெக்டேருக்கு 2500 முதல் 3000 கிலோ வரை அறுவடை செய்ய முடியும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பெரும்பாலும் பூஜைகள், மாலை கட்டும் பலனுக்காக அறுவடை செய்யப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் பெருமாள் கோயில்கள், நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் சபரி மலை சீசனில் இம்மாவட்டத்தில் துளசியின் தேவை அதிகளவில் உள்ளது.
பூஜை மற்றும் மாலை கட்ட பயன்படும் வகையில் அறுவடை செய்யப்படும் துளசி ஒரு கிலோ 25 வரை விற்கப்படுகிறது. எண்ணெய் மற்றும் மருத்துவ பயன்பாட்டுக்காக அறுவடை செய்யப்படும் துளசி கிலோ 40 வரை விற்கப்படுகிறது. ஆனால் எண்ணெய் எடுக்கும் விதத்தில் துளசி பயிர்கள் வட இந்தியாவில் மட்டுமே அதிகளவில் அறுவடை செய்யப்படுகிறது. தென் இந்தியாவில் எண்ணெய் பயன்பாடு அறுவடை மிகவும் குறைவாக உள்ளது.
துளசி பயிர் குறித்த விவரங்களுக்கு உதவி தோட்டக்கலை அலுவலரை 9444227095 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**பயிரிடுவோம் பணம் தரும் பப்பாளி**

த.தேவராஜ்

First Published : 11 Nov 2010 12:12:04 AM IST



கடலூரில் செழித்து வளர்ந்த பப்பாளி மரம்

கடலூர்: கனிகளின் சிகரம் என்றும், ஏழைகளின் ஆப்பிள் என்றும் மருத்துவர்களால் வர்ணிக்கப்படுவது பப்பாளி.

பப்பாளி வெப்ப, மிதவெப்ப நாடுகளில் பயிரிடப்படுகிறது. பப்பாளிப் பழத்தில் குளுக்கோஸ், வைட்டமின்கள் ஏ மற்றும் சி அதிக அளவில் உள்ளன. பப்பாளி பழம், இலைகள், வேர்கள் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டது. பப்பாளிப் பழம் உணவை, குறிப்பாக பருப்புவகை உணவுகள், இறைச்சி போன்றவற்றை எளிதில் செரிக்க வைக்கும் குணம் கொண்டது. 35 கிராம் இறைச்சியை ஒரு கிராம் பப்பாளி செரிக்க வைத்துவிடும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

பப்பாளிப் பழம் பித்தத்தைப் போக்கும். கல்லீரல், கணையம், சிறுநீரக நோய்களை குணப்படுத்தும். ரத்த சோகைக்கும், புற்று நோய்க்கும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. பப்பாளிக் காயில் இருந்து எடுக்கப்படும் பாலில் இருந்து தயாரிக்கப்படும் பப்பாயின் என்ற நொதிப் பொருள் (என்ப்ஸம்) நிறைய மருத்துவ குணம் கொண்டது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், பொள்ளாச்சி, கோவை, தருமபுரி மாவட்டங்களில் வணிக ரீதியாகப் பயிரிடப்படுகின்றன. மிதவெப்ப மற்றும் வெப்பப் பிரதேசங்களில், சமவெளிகளில் களிமண் பூமியைத் தவிர மற்ற நிலங்களில் பப்பாளி நன்றாக வளரும். மலைப் பகுதிகளில், 1200 மீட்டர் உயரம் உள்ள பகுதிகளிலும் வடிகால் வசதி உள்ள நிலங்களிலும் பப்பாளி வளரும். ஆண்டு முழுவதும் பப்பாளியைப் பயிரிடலாம் என்றாலும், பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும் மே முதல் அக்டோபர் மாதம் வரையிலும் பப்பாளி பயிரிடலாம் என்று வேளாண் அலுவலர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

பப்பாளியின் வயது 24 முதல் 30 மாதங்கள். நடவுக் காலத்தில் அதிக மழை இருக்கக் கூடாது. வேர் பகுதியில் அதிகம் தண்ணீர் தேங்கக் கூடாது. பப்பாளியில் கோ1, கோ2, கோ3, கோ4, கோ5, கோ6, கோ7 மற்றும் கூர்க்கனி டியூ, சூரியா போன்ற ரகங்கள் உள்ளன. இவற்றில் கோ2, கோ5,

கோ6 ஆகிய ரகங்கள் சாப்பிடச் சிறந்தவை. கோ2, கோ5 பால் எடுப்பதற்கு ஏற்ற ரகங்கள். பால் எடுத்த பிறகு பழங்களைச் சாப்பிடலாம்.
பப்பாளி நாற்று தயாரிக்க ஏக்கருக்கு 500 கிராம் விதை தேவை. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கேப்டான் சேர்த்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். தொழுஉரம் மற்றும் மணல் நிரப்பி, பாலித்தீன் பைகளில் பை ஒன்றுக்கு 4 விதை வீதம் நட்டு நாற்று தயாரிக்கலாம். 60 நாள்களில் நாற்று தயாராகிவிடும். பப்பாளி பயிரிட நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது, 1.8 மீட்டர் இடைவெளியில் 45 செ.மீ. ல 45 செ.மீ. ல 45 செ.மீ. அளவில் குழிகள் தோண்டி, மண் மற்றும் தொழுஉரமிட்டு நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும்.

வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். செடிகளைச் சுற்றி தண்ணீர் தேங்கக் கூடாது. ஆண், பெண் என இருபால் தன்மை கொண்ட செடிகளை நீக்கியபின், செடி ஒன்றுக்கு 50 கிலோ தழை, மணி, சாம்பல் உரம் மற்றும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா உரமிட்டு நீர் பாய்ச்ச வேண்டும். 4-வது மற்றும் 8-வது மாதங்களில் 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட், 0.1 சதவீதம் போரிக் அமிலம் கலந்து செடிகளில் தெளித்தால் மகசூல் அதிகம் கிடைக்கும் என்கிறார்கள் வேளாண் அலுவலர்கள்.

செடிகள் பூக்கத் தொடங்கியதும் 15 அல்லது 20 செடிகளுக்கு ஒன்று வீதம் ஆண் செடிகளை விட்டுவைத்து, மற்றவைகளை அகற்றிவிட வேண்டும். கோ3, கோ7 ரகங்களில் இருபால் பூக்கள் கொண்டவைகளை மட்டும் விட்டுவிட்டு, பெண் மரங்களை நீக்கிவிட வேண்டும்.
பப்பாளிக் காய்களில் இருந்து பால் எடுக்க, முதிர்ந்த காய்களில் 2 முதல் 3 இடங்களில் லேசாகக் கீறல் ஏற்படுத்தி, பாலை வடிக்க வேண்டும். அதிகாலை முதல், காலை 10 மணி வரை, 3 அல்லது 4 நாள்களுக்கு ஒருமுறை பால் எடுக்கலாம். பப்பாளிப் பாலை அலுமினியப் பாத்திரம் அல்லது ரெக்ஸின், பாலிதீன் தாள்களில் சேகரிக்கலாம். பாலை சூரிய ஒளி அல்லது 40 டிகிரி சென்டிகிரேடில் செயற்கை உலர் கருவிகளில் உலர்த்தலாம். உலர்த்தத் தாமதம் ஆனால் தரம் பாதிக்கப்படும்.

ஒரு ஹெக்டேருக்கு 3 ஆயிரம் முதல் 3,750 கிலோ வரை பப்பாளி பால் கிடைக்கும். பப்பாளிப் பழங்களைவிட பப்பாளிக் காய்களில் இருந்து எடுக்கப்படும் பாலுக்கு நல்ல விலை கிடைக்கிறது. ஓசூர், பெங்களூர் பகுதிகளில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் நல்ல விலை கொடுத்து வாங்குகின்றன.
இதுகுறித்து கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே ஆடூர்குப்பம் கிராமத்தில் பழத்துக்காக பப்பாளி பயிரிட்டுள்ள விவசாயி ஜனார்த்தனம் கூறுகையில், "5 ஏக்கரில் பப்பாளி பயிரிட்டு

இருக்கிறேன். ஏக்கருக்கு |70 ஆயிரம் வரை செலவாகிறது. |5 லட்சத்துக்கு மேல் லாபம் கிடைக்கிறது. கடலூர் மாவட்ட அங்காடிகளிலேயே பழங்களை விற்பனை செய்கிறேன்" என்றார்.

**வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் டிச.15 -க்குள் சம்பா நெல்லுக்கு காப்பீடு செய்யலாம்**

First Published : 10 Nov 2010 12:38:45 PM IST

புதுக்கோட்டை, நவ. 9: தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் நிகழாண்டுக்கான சம்பா நெல் பயிருக்கு டிச. 15-ம் தேதிக்குள் காப்பீடு செய்யலாம்.

இதுகுறித்து தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவன மண்டல மேலாளர் சி. அன்பரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

""நிகழாண்டுக்கான காப்பீட்டுத் திட்டத்தில் சம்பா நெல் பயிருக்கு கடன் பெறாத விவசாயிகள் சேர கடைசி தேதி 15.12.2010. ஆகும். எனினும், வெள்ளம் வறட்சி என முன்கூட்டியே தெரிந்துகொண்டு முன்னதாகவே பிரிமியம் செலுத்தினால் அது நிராகரிக்கப்படும்.

எனவே, விவசாயிகள் காலம் தாழ்த்தாமல் இத்திட்டத்தில் சேர முன்வர வேண்டும். சம்பா நெல் பயிரில் ஓர் ஏக்கருக்கு சாதாரண பிரிமியத் தொகை 55 சதவிகிதம் மானியம் போக சிறு,குறு விவசாயிகளுக்கு ரூ.117. ஏனைய விவசாயிகளுக்கு ரூ.130. காப்பீட்டின் மதிப்பு ரூ.13,024.

எனவே, பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் தங்கள் விருப்பத்தின்பேரில் பின்வரும் கூடுதல் பிரிமியத் தொகையைச் செலுத்தினால் அதிக பலனைப் பெறலாம். அதில், ஓர் ஏக்கருக்கு கூடுதலாக சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை ரூ.456, ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை ரூ.507. காப்பீட்டின் மதிப்பு ரூ.11,396. ஆகவே, சாதாரண மற்றும் கூடுதல் மதிப்பு ஓர் ஏக்கருக்கு ரூ.24,420. இந்த இரண்டுக்கும் சேர்த்து சிறு,குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் ஓர் ஏக்கருக்கு ரூ.574. ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் ரூ. 637.

காப்பீட்டுத் தொகையைக் கடைசி தேதிக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். வறட்சி, வெள்ளம் குறித்து முன்னதாகவே தெரிந்தால் குறிப்பிட்ட தேதியில் மாற்றம் செய்யப்படும். பயிர்களுக்கு மகசூல் அடிப்படையில் இழப்பீடு ஏதும் இருந்தால் திட்டங்களுக்கு உள்பட்ட இழப்பீட்டுத் தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

மேலும், விவரங்களுக்கு, தேசிய வேளாண் காப்பீட்டுக் கழகம்,(மத்திய அரசு நிறுவனம்), மண்டல அலுவலகம்,323 முதல் தளம், ஆந்திரா இன்சூரன்ஸ் கட்டடம், தம்புச்செட்டி தெரு,

சென்னை - 600 001 என்ற முகவரிக்கோ 044 - 43403400 என்ற தொலைபேசி எண்ணுக்கோ தொடர்புகொள்ளலாம்."

**கணினி மயமாகும் வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**

First Published : 10 Nov 2010 10:54:26 AM IST

தேனி, நவ. 9:÷தமிழகத்தில் கூட்டுறவுத் துறை மூலம் செயல்பட்டு வரும் நிலவள வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கணினி மயமாக்கப்பட உள்ளன.

÷கூட்டுறவுத் துறை மூலம் செயல்பட்டு வரும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நகர வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, மாநில அளவில் தகவல் மற்றும் கணக்குப் பறிமாற்ற வசதி, துரித சேவை ஆகியவற்றிற்காக கூட்டுறவு நிலவள வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியவற்றின் பணிகளை கணினி மயமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

÷இதன்படி, அந்தந்த மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, வரவு-செலவு கணக்கு ஆகியவற்றின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சங்கங்கள் 3 கட்டமாக ஒரு ஆண்டுக்குள் கணினி மயமாக்கப்பட உள்ளன.

÷இது குறித்து கூட்டுறவுத் துறை பணியாளர்கள் கூறியதாவது:÷தேனி மாவட்டத்தில் உள்ள 81 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், தர மதிப்பீடு அடிப்படையில் முதல் கட்டமாக 28 சங்கங்கள் கணினி மயமாக்கப்பட உள்ளன.

÷இந்தச் சங்கங்களுக்கு எல்காட் நிறுவனம் மூலம் தலா 2 முதல் 7 கணினிகள் வரை வழங்கப்பட உள்ளன. சங்கங்களின் பணிகள், இணையதளம் மூலம் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்படும். இப்பணிகள் நவம்பர் மாத இறுதிக்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. இங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு மதுரையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

÷மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளையும் 2011, மார்ச் மாதத்துக்குள் கணினி மயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றனர்.

தினமலர்

**சூரிய காந்தி எண்ணெய் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2010,01:49 IST

சேலம்: தீபாவளி பண்டிகை முடிந்து விட்ட நிலையிலும் சூரியகாந்தி எண்ணெயின் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகைக்கு முன் அக்டோபர் மாதத்தில் ஆறு முறை விலை உயர்வை சந்தித்த சூரிய எண்ணெய் மீண்டும் நேற்று லிட்டருக்கு 2.50 ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களின் விளைச்சலில் ஏற்பட்டுள்ள பாதிப்பால் உற்பத்தியில் கடும் குறைந்து உள்ள நிலையில் வெளிமாநிலங்களின் வரத்தும் குறைந்துள்ளதால் எண்ணெய் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

சூரிய காந்தி எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை தொடர்ந்து மலேசியாவில் இருந்து சூரிய காந்தி எண்ணெய்யை வரவழைக்கும் வகையில் ஆர்டர் கொடுத்து இருந்தனர். ஆனால் மலேசியாவில் இருந்து இரண்டு கப்பல்களில் சூரிய காந்தி எண்ணெய்யும் தமிழகத்துக்கு வந்து கொண்டு இருந்தது. வியாபாரிகளின் திட்டமிட்டபடி சூரிய காந்தி எண்ணெய் நவம்பர் 6ல் தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து இருக்க வேண்டும். ஆனால், சென்னைக்கு அருகே ஏற்பட்ட ஜல் புயல் காரணமாக துறைமுகத்தில் சரக்கு இறக்குமதி நிர்வாகம் அனுமதி மறுத்து விட்டது. இதன் காரணமாக கப்பலில் இருந்து எண்ணெய் இறக்குவதில் திடீர் சிக்கல் ஏற்பட்டது.

அதே நேரத்தில் தீபாவளி பண்டிகைக்கு முன் எண்ணெய் விற்பனை அதிகரித்ததால் இருப்பு சரக்கு அனைத்தும் விற்று தீர்ந்து விட்டது. இதன் காரணமாக தற்போது மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை தங்களுக்கு சாதகமாக பயன் படுத்திக் கொண்ட வியாபாரிகள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி நேற்று சூரிய காந்தி எண்ணெய் விலையில் லிட்டருக்கு 2.50 ரூபாய் உயர்த்தி விட்டனர்.

நேற்றைய நிலவரப்படி சூரிய காந்தி எண்ணெய் 15 லிட்டர் கொள்ளவு கொண்ட டின் ஆயிரம் ரூபாய்க்கும், சில்லரை விலையில் லிட்டர் 73 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதே போல் ரீபைன்ட் சூரிய காந்தி எண்ணெய் டின் 1,350 ரூபாய்க்கும், சில்லரை விலையில் 95 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. சூரிய காந்தி எண்ணெய் விலையில் உயர்வு ஏற்பட்ட போதிலும் பிற எண்ணெய் வகையில் எந்த உயர்வும் ஏற்பட வில்லை.
* தீபாவளி பண்டிகைக்கு பின் சர்க்கரை விலையில் சரிவு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்த

நிலையில் நேற்று சர்க்கரை குவிண்டாலுக்கு 50 ரூபாய் அதிகரித்தது. கடந்த வாரம் வரை சர்க்கரை குவிண்டால் 2,840 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த விலையில் 50 ரூபாய் அதிகரித்து நேற்று 2,890 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.மொத்த விலையில் ஏற்பட்ட உயர்வை அடுத்து சில்லரை விலையில் கிலோவுக்கு ஒரு ரூபாய் அதிகரித்து நேற்று சர்க்கரை கிலோ 33 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

* மாவுப் பொருட்கள் வகையில் ரவை விலையில் குவிண்டாலுக்கு நேற்று 200 ரூபாய் திடீர் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை மொத்த விலையில் ரவை குவிண்டால் 2,400 ரூபாய்க்கு விற்றது. இந்த விலையில் நேற்று 200 ரூபாய் அதிகரித்து 2,600 ரூபாய்க்கு விற்றது. ஆனால் சில்லரை விலையில் கிலோ 31 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர். சூரியகாந்தி எண்ணெய், சர்க்கரை, ரவை ஆகியவற்றின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது இனிப்பு பலகார தயாரிப்பாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**தே.பருப்பு உற்பத்தி கடுமையாக பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2010,01:42 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் தொடர் மழை காரணமாக தேங்காய் பருப்பு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வரத்து குறைவால் நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை அதிகரித்துள்ளது. செப்டம்பர் 20ம் தேதி முதல் கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. 15 நாட்களாக பகல் நேரத்தில் கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் சூரியனை பார்ப்பதே அரிதாக உள்ளது. மழை காரணமாக தேங்காய் பருப்பு உற்பத்தியில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. உடைத்த தேங்காயை முழுமையாக ஈரப்பதம் இல்லாமல் காய வைக்க முடியாமல் விவசாயிகள் பெரும் அவதிப்படுகின்றனர்.

கோபி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு அக்டோபர் 6ம் தேதி 409 மூட்டை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. தொடர்மழை காரணமாக 13ம் தேதி 407, 20ம் தேதி 253, 27ம் தேதி 258, நவம்பர் 3ம் தேதி 156 மூட்டை பருப்பு வந்தது. நேற்று மேலும் வரத்து குறைந்து, 140 மூட்டைகளே விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக தேங்காய் பருப்பு கிலோ 48.36 ரூபாய், குறைந்தபட்சமாக 46.57 ரூபாய்க்கு விற்றது. வரத்து குறைவால் கடந்த வாரத்தை விட, நேற்று

ஒரு ரூபாய் 10 பைசா விலை அதிகரித்திருந்தது. மூன்று லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**வரத்து குறைந்ததால் விலையில் ஏற்றம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2010,00:52 IST

ஊட்டி: நீலகிரியில் பருவ மழை பொய்த்ததால் உற்பத்தி குறைந்து, உருளை கிழங்கு விலை அதிகரித்து உள்ளது.
நீலகிரி மாவட்டத்தில், ஜூன் மாதம் துவங்கிய பருவமழை, சில நாட்கள் மட்டுமே தலை காட்டியது. ஜூலை மாத துவக்கத்தில் மழை பொழியும் என்ற நம்பிக்கையில், உருளைக்கிழங்கு, காரட், முட்டைகோஸ் உட்பட பருவகால மலை காய்கறிகள் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டனர்; இவர்களின் எதிர்பார்ப்பு பொய்த்ததால் நஷ்டம் ஏற்பட்டது. மேலும், இங்குள்ள நீர் தேக்கங்களிலும் நீர் மட்டம் குறைந்ததால், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு சிக்கல் ஏற்படும் நிலை உருவானது. கடந்த இரு வாரங்களாக, மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

காய்கறி விவசாய தோட்டங்களில் நீர் தேங்கியதால், விவசாயப் பயிர்கள் அழுகும் நிலைக்கு தள்ளப்பட்டன. இதை சமாளிக்க, ஊட்டியில் உள்ள பிங்கர்போஸ்ட், குளிச்சோலை, குருத்துக்குளி உட்பட பல கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில நாட்களாக மழை இல்லாமல் மேகமூட்டம் நிலவி கண்ணாமூச்சி காட்டி வருகிறது. சில வாரங்களாக பெய்த மழையால், ஊட்டி அருகேயுள்ள எமரால்டு, அவலாஞ்சி, குந்தா உட்பட அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் கடை போகத்துக்காக பயிரிடப்பட்ட கிழங்கு மற்றும் காய்கறிகள் பருவ மழை பொய்த்ததால் வரத்து குறைந்துள்ளது. கிழங்கு வரத்து குறைந்துள்ளதால் அவற்றில் விலை அதிகரித்துள்ளது. ஊட்டி மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ கிழங்கு 23 முதல் 25 ரூபாய்க்கு விலை போனது. மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் ஒரு துண்டு கிழங்கு குறைந்தபட்சம் 750 ரூபாய் முதல் அதிகபட்சமாக 900 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதன் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மண் மாதிரி சோதனை செய்வது அவசியம் : வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2010,01:25 IST

அரியலூர்: அரியலூரில் விவசாய மண் பரிசோதனை நிலையம் செயல்படுகிறது. அரியலூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்தானகிருஷ்ணன் விடுத்த அறிக்கை: அரியலூர்-வாலாஜாநகரத்தில் மண் பரிசோதனை நிலையம் கடந்த 2009 ஜூன் மாதம் முதல் இயங்கி வருகிறது. இதுவரை இங்குள்ள மண் பரிசோதனை நிலையத்தில், 18 ஆயிரம் மண் மாதிரிகளும் ஆயிரம் நீர் மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டு, மண் வள அட்டை மூலம் விவசாயிகளுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பரிந்துரை மூலம் விவசாயிகள் உர செலவை குறைத்து, தேவையான அளவு மட்டுமே உரமிட்டு, குறைந்த செலவில் அதிக லாபமடைந்துள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சாகுபடி செய்யும் நிலத்தில் விளைச்சல் குறையும் என்பதால், மண் மாதிரி எடுத்து சோதனை செய்வது அவசியமாகும். பயிர் சத்துக்கள் மண்ணிலிருந்து கிடைப்பதில் குறைபாடு மற்றும் உரங்களிலிருந்து கிடைக்கும் பயிர் சத்து குறைவாக இருப்பதால், வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறைபாடு ஏற்படும். எனவே மண் மாதிரி எடுத்து சோதனை செய்வது அவசியமானதாகும்.

வயிலில் அறுவடை செய்த பின்பும், அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில் மண் பரிசோதனைக்கான மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரே நிலத்தில் வெவ்வேறான மண் இருந்தால் தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். மேட்டு பாங்கான பகுதி, பள்ளம் சார்ந்த பகுதி என இருந்தாலும் இதே நடைமுறையை பின்பற்ற வேண்டும். வரப்பு வாய்க்கால் அருகிலோ, மர நிழலிலோ, அல்லது எரு குவிந்த இடத்திலோ மண் மாதிரி எடுக்க கூடாது. கடலை, எள், போன்ற எண்ணெய் வித்துக்கள் (தென்னை தவிர) பருப்பு வகைகளுக்கு அரை அடி, கரும்பு மற்றும் பருத்தி, வாழை, காய்கனி போன்ற பயிர்களுக்கு முக்கால் அடி, தென்னைக்கு மூன்று அடி, பழமர கன்றுகளுக்கு ஏழு அடி ஆழத்தில் குழி வெட்டி மண் மாதிரி எடுக்க வேண்டும்.

ஆய்வு கட்டணம்: மண் மாதிரி ஒன்றுக்கு பேரூட்ட சத்துக்கு 10 ரூபாய். நுண்ணுட்ட சத்துக்கு 10 ரூபாய். பேரூட்ட சத்து மற்றும் நுண்ணுட்ட சத்துக்கு 20 ரூபாய். நீர் மாதிரி ஒன்றுக்கு 20 ரூபாய். மண் மாதிரியுடன், விவசாயி பெயர், முழு முகவரி, நிலத்தின் சர்வே எண், பாசன வசதி, பயிரிடப்பட்ட பயிர், பயிரிடப்போகும் பயிர், ஆகியவை பற்றிய விபரம் குறிப்பிட வேண்டும். மண் மாதிரி மற்றும் பாசன நீர் மாதிரியை, வேளாண் உதவி அலுவலர் மூலமாகவோ அல்லது

நேரடியாகவோ, வேளாண்மை உதவி இயக்குநர், மண் மாதிரி பரிசோதனை நிலையம், ஜெயங்கொண்டம் சாலை, வாலாஜாநகரம், அரியலூர்-621704. என்கிற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**பட்டர்பீன்ஸ், உருளை விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2010,03:30 IST

மதுரை : மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில், பட்டர்பீன்ஸ், உருளைகிழங்கு, முருங்கைக்காய் விலை அதிகரித்துள்ளது. தீபாவளி பண்டிகைக்காக, விலை சீராக இருந்த காய்கறிகள், தற்போது அதிகரிக்கின்றன. கடந்த வாரம் கிலோ 30 ரூபாய்க்கு விற்ற பட்டர் பீன்ஸ் நேற்று 60 ரூபாய்க்கும், 10 ரூபாய்க்கு விற்ற உருளைகிழங்கு 18 - 24 ரூபாய்க்கும், 40 ரூபாய்க்கு விற்ற முருங்கைக்காய் 75 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. தொடர் மழையும் ஒரு காரணம்.

நேற்றைய காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர் பி.எஸ். முருகன் கூறியதாவது : ஒரு கிலோ தக்காளி 14 ரூபாய், உருட்டு தக்காளி 12, கத்தரிக்காய் 10, வெள்ளை கத்தரிக்காய் 5, சுரைக்காய் 5, பூசணிக்காய் 4, முள்ளங்கி 14, பீட்ரூட் 9, கேரட் 10, கருணைகிழங்கு 20, சேனை கிழங்கு 20, புடலங்காய் 8, வெண்டைக்காய் 12, பச்சை மிளகாய் 10, ஆந்திரா பச்சை மிளகாய் 9, வெங்காயம் 22, சிறியது 18, பாகற்காய் 18, சிறியது 40, இஞ்சி 25, காலிபிளவர் 4-7, முட்டைகோஸ் 9, பீன்ஸ் 30, சோயா பீன்ஸ் 40, பட்டாணி 75, அவரைக்காய் 25, கொத்தவரை 7, கறிவேப்பிலை 12, கொத்தமல்லி 10, புதினா 7, கீரை வகைகள் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.மாட்டுத்தாவணி மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**தீபாவளிக்கு பிறகும் சீராக அரிசி விலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2010,03:30 IST

மதுரை : மதுரையில் ஒரு மாதமாக அரிசி விலை சீராக இருக்கிறது. ஜனவரி வரை விலையில் அதிகம் மாற்றம் இருக்காது என, வியாபாரிகள் கருதுகின்றனர்.அரிசி விலை குறித்து, அரிசி ஆலை சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது : கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 29 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 24 ரூபாய்க்கும்,

வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 26க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 20க்கும் விற்கப்பட்டது.

ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 45 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அரைவேக்காட்டு அரிசி கிலோ 27 முதல் 24 ரூபாய் வரை விற்கப்படுகிறது என்றார். மொத்தம் மற்றும் சில்லரை கடைகளில் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை மாறுபடுகிறது.

**வேளாண்மை, தோட்டக்கலை பயிர்களுக்கு காப்பீடு திட்டத்தில் ரூ. 87 லட்சம் அனுமதி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2010,03:35 IST

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்திற்கு 87 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பம் உதவி வேள ாண்மை இயக்குநர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.இது குறித்து தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;தூத்துக்குடி மாவட்டத்திற்கு புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படும் அந்த இழப்பினை ஈடுகட்ட வேளாண்மை துறையின் மூலம் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

பயிர்கடன் வாங்கும் போது தாங்கள் கடன் வழங்கும் பாங்கிலும், கடன்பெறா விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் தங்கள் விருப்பத்தின் பேரில் பயிர்காப்பீடு செய்து கொள்ளலாம். நெல் பயிருக்கு அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கு 50 சதவீத பிரீமியமாக ஏக்கருக்கு 144 ரூபாயும், உளுந்து பயிருக்கு 21ம், பாசிப்பயிருக்கு 29ம், கடன்பெறும் விவசாயிகள் நெற்பயிருக்கு 160 ரூபாயும் (ஏக்கருக்கு), உளுந்து பயிருக்கு 23 ரூபாயும், பாசிப்பயிறுக்கு 33ம் செலுத்தி காப்பீடு செய்யலாம்.

மீதமுள்ள 50 சதவீத பிரீமியத் தொகையினை மானியமாக அரசால் செலுத்தப்படும். இந்த திட்டத்தில் மானியமாக இம் மாவட்டத்திற்கு வேளாண்மை பயிர்களுக்கு 50 லட்ச ரூபாயும், தோட்டக்கலை பயிர்களுக்கு மானியமாக 37 லட்சத்து 58 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடன் பெறுபவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் உத்திரவாத மகசூலின் மதிப்பீடு வரை காப்பீடு செய்து கொள்ளலாம். மற்ற விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரிலும் கூடுதலாக காப்பீடுதொகை செலுத்தி சராசரி மகசூலின் 15 சதவீத மதிப்பு வரை காப்பீடு செய்து

கொள்ளலாம்.  இதற்கான விண்ணப்ப படிவம் வட்டார அளவில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் கிடை க்கும்.  விவசாயிகள் தங்கள் வட்டாரத்தில் அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கான பிரீமியத்தொகையை வேளாண் கூட்டுறவு பாங்க் அல்லது இதர தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளில் செ லுத்தி திட்டத்தின் மூலம் பயன் பெற வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கண்மாய் மதகு பழுதால் வீணாகும் நீர் : ஒரு போக சாகுபடி கூட கை கூடுமா**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2010,22:30 IST

சிவகாசி : சிவகாசி அருகே மதகு பழுதடைந்ததால் மழை நீரை வீணாகிறது. ஒரு போக சாகுபடி கூட கைகூடுமா என்ற கவலையில் விவசாயிகள் தவித்து வருகின்றனர். சிவகாசி தாலுகா, கொத்தனேரி கிராமத்தில் 350 ஏக்கர் நஞ்சை நிலங்கள் கொத்தனேரி கண்மாய் நீரை நம்பியுள்ளன.  பலத்த மழையால் கொத்தனேரி கண்மாய் நிரம்பியுள்ளது. இதில் உள்ள மதகு பலகை சேதமடைந்து அதன் வழியாக தண்ணீர் தொடர்ந்து வெளியேறுகிறது. பாசனத்திற்கு நீரை தேக்கி வைக்கும் முயற்சியில் அப்பகுதி விவசாயிகள் தற்காலிகமாக மணல் மூடைகளை வைத்து தடுத்துள்ளனர். மணல் மூடைகள் தடுப்பு இருந்தாலும் மதகு ஓட்டை வழியாக நீர் வெளியேறி செவலூர் கண்டனேரி கண்மாய்க்கு செல்கிறது.

சாகுபடிக்கு நீர் பற்றாக்குறை ஏற்படுமோ, இருபோக சாகுபடி என்று நனவாகுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர். முடங்கிய சீரமைப்பு பணி: சிவகாசி ஒன்றியத்திற்கு உட்பட்ட இக்கண்மாயின் மதகை சீரமைக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கைபடி 2006-2007ல் சீரமைக்க 10 லட்ச ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை எனவும், அடுத்து வரும் காலங்களில் பழுது பார்க்கப்படும் என கூறி சீரமைப்பு திட்டத்தை கிடப்பில் போட்டனர்.   எனவே, கண்மாய் மதகை பொதுப்பணித்துறை மூலம் சீரமைத்து கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரி வருகின்றனர்.

தினத் தந்தி

## கோவை மாவட்டத்தில் தொடர் மழை: சிறுவாணி–பில்லூர் அணைகளின் நீர்மட்டம் கிடு,கிடு உயர்வு சித்திரைச்சாவடி அணை நிரம்பி வழிகிறது

கோவை,நவ.11–

கோவை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் சிறுவாணி–பில்லூர் அணைகளின் நீர்மட்டம் கிடுகிடு என்று உயர்ந்து வருகிறது. கோவை நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட சித்திரைச்சாவடி அணை நிரம்பி வழிகிறது.

தொடர் மழை

கோவை மாவட்டம் முழுவதும் கடந்த ஒரு வார காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் மாலை தொடங்கி நேற்று காலை வரை வால்பாறை, பொள்ளாச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது.

மழை காரணமாக பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த கருங்குட்டை, குஞ்சாம்பாளையம் குட்டை புதூர் பள்ளம், அண்ணன்–தம்பி பள்ளம் ஆகிய குளங்களில் நீர் நிரம்பி காணப்படுகிறது. உக்கடம் பெரியகுளம், வாலாங்குளம், குறிச்சிகுளம், முத்தணங்குளம், பேரூர் குளம், உள்ளிட்ட அனைத்து குளங்களிலும் நீர்மட்டம் கிடு,கிடு என்று உயர்ந்து உள்ளது. கோவை நகரப் பகுதியிலும் நேற்று அதிகாலை வரை மழை பெய்தது. அதன்பின்னர் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும் வெயில் அடிக்க தொடங்கியது.

வெள்ளம் புகுந்தது

இதற்கிடையில் மழை காரணமாக வெள்ளம் புகுந்த கோவை உக்கடம் ஜி.எம் நகர் பகுதிகளை கோவை மாநகராட்சி மேயர் வெங்கடாசலம், துணை மேயர் கார்த்திக், கவுன்சிலர் ஜானகி நாகராஜ் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அப்போது அந்த வழியாக செல்லும் ராஜவாய்க்காலை ஆக்கிரமித்து பொதுமக்கள் சிலர் வீடுகள் கட்டி இருப்பதால் அங்குள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது தெரியவந்தது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி தண்ணீர் வடிவதற்கு நடவடிக்கை

எடுக்க அதிகாரிகளுக்கு மேயர் வெங்கடாசலம் உத்தரவிட்டார்.


மழை அளவு

கோவை மாவட்டத்தில் நேற்று பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

கோவை பீளமேடு–43.90 மி.மீ, அன்னூர்–27 மி.மீ, பெரியநாயக்கன்பாளையம்–26 மி.மீ, சூலூர்–36 மி.மீ, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்–21.20மி.மீ, சின்னக்கல்லார்–65 மி.மீ, சின்கோனா–22மி.மீ, சோலையார் அணைப்பகுதி–28மி.மீ, சிறுவாணி அணையின் மேற்பகுதி–40 மி.மீ, சிறுவாணி அடிவார–48 மி.மீ, கோவை தெற்கு தாலுகா–50.20 மி.மீ. பொள்ளாச்சி–12 மி.மீ ஆகும்.

மழை காரணமாக கோவைக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி, பில்லூர் அணைகளின் நீர்மட்டம் அதிகரித்து உள்ளது. சிறுவாணி அணையின் மொத்த கொள்ளவு 878.5 மீட்டர் ஆகும். தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக சிறுவாணி அணையின் நீர்மட்டம் 874.10 மீட்டராக உயர்ந்துள்ளது. நொய்யல் ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட சித்திரை சாவடி அணை நிரம்பி வழிகிறது.

## உற்பத்தி, கொள்முதல் உயர்ந்து வருவதால் உணவு தானியங்கள் கையிருப்பு 4.87 கோடி டன்னாக அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நாட்டில் பருவமழை நன்றாக உள்ளதால், உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்து

வருகிறது. இதனையடுத்து இம்மாத தொடக்கத்தில் நாட்டில் உணவு தானியங்கள் கையிருப்பு 4.87 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதற்கு முந்தைய மாதத்தின் கையிருப்புடன் (4.62 கோடி டன்) ஒப்பிடும்போது இது, 5.4 சதவீதம் அதிகமாகும். இந்த தகவலை மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் உணவு தானியங்கள் கையிருப்பு, அவசரகால தேவைகளுக்கான அளவைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது என்று மத்திய உணவுத்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

சேமிப்பு கிடங்குகள்

நாட்டிலுள்ள உணவு சேமிப்பு கிடங்குகளில் உணவு தானியங்கள் நிரம்பி வழிகின்றன. இதனையடுத்து மத்திய அரசு வறுமைக்கோட்டுக்கு கீழ் வசிப்பவர்களுக்காக, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூடுதலாக 25 லட்சம் டன் உணவு தானியங்கள் ஒதுக்கி உள்ளது. ஆனால் இதில் 6 சதவீதத்தை மட்டுமே மாநில அரசுகள் எடுத்துச் சென்றுள்ளன. மாநில அரசுகள், ஒதுக்கப்பட்டுள்ள உணவு தானியங்களை உரிய நேரத்தில் எடுத்துச் செல்வதில்லை என்று சரத்பவார் மேலும் தெரிவித்தார்.

கரீப் பருவம்

நடப்பு கரீஃப் பருவத்தில் நாட்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 11.46 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே காலத்தில் நெல் உற்பத்தியும் 6 சதவீதம் அதிகரித்து 8.04 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற அக்டோபர் 1–ந் தேதியிலிருந்து நவம்பர் 8–ந் தேதி வரையிலாக காலத்தில் மத்திய அரசு 92 லட்சம் டன் நெல்லை கொள்முதல் செய்துள்ளது. இதனையடுத்து இம்மாதம் 1–ந் தேதி அன்று நாட்டின் அரிசி கையிருப்பும் 2.32 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. முந்தைய மாதத்துடன் ஒப்பிடும்போது இது, 47.30 லட்சம் டன் அதிகமாகும்.

எனவே சாதாரண அரிசி ஏற்றுமதி செய்வதற்கான தடையை நீக்க வேண்டும் என ஆந்திரபிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்களின் அரிசி ஏற்றுமதியாளர்கள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் இந்த கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

கோதுமை

சென்ற நவம்பர் 1–ந் தேதி அன்று கோதுமை கையிருப்பு 2.56 கோடி டன்னாக உள்ளது. நாட்டில் கோதுமை அதிக அளவில் உற்பத்தி ஆகும் மாநிலங்களான பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் கோதுமை பயிரிடும் பரப்பளவு உயர்ந்துள்ளது. சென்ற 2009–ஆம் ஆண்டில் நாட்டில் வறட்சி நிலவியது. அப்போதும் கோதுமை


உற்பத்தி 8.07 கோடி டன்னாக உயர்ந்திருந்தது. பயிரிடும் பரப்பளவு 2.78 கோடி ஹெக்டேராக இருந்தது. நடப்பு ஆண்டில் நாட்டின் கோதுமை உற்பத்தி சென்ற ஆண்டைக் காட்டிலும் 2 சதவீதம் அதிகரித்து 8.20 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற கரீஃப் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 40 சதவீதம் அதிகரித்து 60 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உணவு பணவீக்க விகிதம்

நாட்டில் அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்ந்து வரும் நிலையில், உணவு தானியங்கள் உற்பத்தி மற்றும் கையிருப்பு உயர்ந்து வருவது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். சென்ற அக்டோபர் 23–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 0.9 சதவீதம் குறைந்து 12.85 சதவீதமாக குறைந்துள்ளது.

சென்ற செப்டம்பர் மாதத்தில் நாட்டில் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 8.62 சதவீதமாக உள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்ட கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 0.25 சதவீதம் உயர்த்தியது. எனவே உணவு தானியங்கள் உற்பத்தி மேம்பட்டு வருவது அனைத்து தரப்பினருக்கும் உற்சாகம் அளிப்பதாக அமைந்துள்ளது.

## செலவினங்கள் அதிகரிப்பால் தேயிலை உற்பத்தி குறையும்



சுதானுகா கோசல்

கொல்கத்தா

தேயிலை உற்பத்தியில் முன்னணி நாடுகளான கென்யா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தேயிலை உற்பத்திக்கான செலவினம் மிகவும் அதிகமாக உள்ளது. மேலும் சமூக செலவினங்களும் மிகவும் உயர்ந்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் எதிர்காலத்தில் உள்நாட்டில் தேயிலை உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என தன்ஸ்ரீ டீ நிறுவனத்தின் தலைவர் சி.கே. தனுகா தெரிவித்தார்.

இலங்கை

அவர் மேலும் கூறும்போது, "உள்நாட்டில் தேயிலை உற்பத்திக்கான செலவினம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தநிலையில் மாறுபட்ட பருவநிலையாலும் தேயிலை உற்பத்தி குறைந்து வருகிறது. இந்திய தேயிலை தோட்டங்களில் நீர்ப்பாசன வசதிக்கான செலவு ஒவ்வொரு ஆண்டும் மிகவும் உயர்ந்து வருகிறது. அதேசமயம் கென்யா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் மேற்கண்டவற்றிற்கான செலவினம் மிகவும் குறைவாக உள்ளது" என்று தெரிவித்தார்.

உற்பத்தி

இந்தியாவின் தேயிலை உற்பத்தி 98 கோடி கிலோ என்ற அளவில் உள்ளது. இதில் 8 கோடி கிலோ ஆர்தோடக்ஸ் வகை தேயிலையாகும். இதுகுறித்து இந்திய தேயிலை சங்கத்தின் இணைச் செயலாளர் சுஜித் பாத்ரா கூறும்போது, "இந்தியாவில் ஒரு ஹெக்டேரில் 1,700 கிலோ தேயிலை உற்பத்தியாகிறது. அதேசமயம் கென்யாவில் ஒரு ஹெக்டேரில் 2,200 கிலோ உற்பத்தியாகிறது. இலங்கையின் தேயிலை உற்பத்தி இந்தியாவின் தேயிலை உற்பத்தியை ஒட்டியே உள்ளது. இந்தியாவில் ஒரு கிலோ தேயிலை உற்பத்திக்கான செலவினம் 1.90 டாலர் (சுமார் ரூ.85) என்ற அளவில் மிகவும் அதிகமாக உள்ளது. ஆனால் கென்யாவில் ஒரு கிலோ தேயிலைக்கான உற்பத்திச் செலவு 1.15 டாலர் (சுமார் ரூ.52) என்ற அளவில் மிகவும் குறைவாக உள்ளது" என்று தெரிவித்தார்.

அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவின் தேயிலை உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் தேயிலை அதிக அளவில் உற்பத்தியாகும் மாநிலங்களில் பழமையான தேயிலை செடிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக புதிய செடிகள் நடப்பட்டு வருகின்றன. நாட்டின் தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் சிறப்பு நிதியம் ஒன்று உள்ளது.

சமூக செலவினங்கள்

உற்பத்திச் செலவு அதிகரிப்பிற்கு சமூக செலவினங்களும் முக்கிய காரணமாக உள்ளது. தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி, கல்வி, குடிநீர் வசதி, நியாய விலைக்கடைகள் வாயிலாக பொருள்கள் அளித்தல், வீட்டு வசதி

போன்ற செலவினங்களையும் தேயிலை தோட்ட அதிபர்கள் செலவிட வேண்டியுள்ளது. அதேசமயம் கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் மேற்கண்ட சமூக செலவினங்களை அரசே ஏற்றுக் கொள்கிறது. இதுபோன்ற நிலை, இந்தியாவிலும் கொண்டு வரப்பட வேண்டும் என தேயிலை தோட்ட நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றன என மெக்லியோடு ரசல் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆதித்ய கெய்த்தான் தெரிவித்தார்.

## தமிழ்நாட்டில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது இன்று உள் மாவட்டங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவிப்பு

சென்னை, நவ.11–

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் உள் மாவட்டங்களில் இன்று மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவமழை தீவிரம்

வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் கரூர் மாவட்டத்தில் பஞ்சபட்டி என்ற இடத்தில் கனமழை பெய்தது. அங்கு 26 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி கூறியதாவது:–

தமிழ்நாட்டின் உள் மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் உள் மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். சென்னையில் சில நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிந்த மழை அளவு வருமாறு:–

பழனி 12 செ.மீ., சத்தியமங்கலம் 10 செ.மீ., அரவக்குறிச்சி 8 செ.மீ., பரமத்தி வேலூர், பவானிசாகர், கோபிச்செட்டிப்பாளையம், கொடுமுடி, கரூர் பரமத்தி தலா 7 செ.மீ., புதுச்சேரி விமான நிலையம், நன்னிலம், கரூர், திண்டுக்கல் தலா 6 செ.மீ., கோவை, உளுந்தூர்பேட்டை, காங்கேயம், பவானி, வெம்பாவூர் தலா 5 செ.மீ.

நாகப்பட்டினம், குமாரப்பாளையம், திருச்சுழி, கடவூர் தலா 4 செ.மீ., சேத்தியாதோப்பு, திருக்கோவிலூர், தஞ்சை, கொடவாசல், செண்டாமங்கலம் தம்மாபட்டி,

மேட்டுப்பாளையம், தாராபுரம், சமயபுரம், ஜெயங்கொண்டம் உள்ளிட்ட ஏராளமான இடங்களிலும் மழை பெய்துள்ளது.

சென்னையில் நேற்று மதியம் வண்டலூர், ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி, பொத்தேரி, காட்டாங்கொளத்தூர், ஆழ்வார்திருநகர், விருகம்பாக்கம், மதுரவாயல், கோயம்பேடு உள்பட பல இடங்களில் மழை பெய்தது.

## இன்று நடைபெறும் ஏலத்தில் தேயிலை தூள் விலை உயருமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

குன்னூர், நவ.11–

குன்னூரில் இன்று (வியாழக்கிழமை) நடைபெறும் ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை உயர்வு ஏற்படுமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

தேயிலை சாகுபடி

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடு பட்டு உள்ளனர். தென்னிந்தி யாவில் தேயிலை விவசாயத் தில் நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகள் தான் அதிக அள வில் ஈடுபட்டு உள்ளனர்.

சிறு விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் இருந்து அறு வடை செய்யும் பச்சை தேயி லையை மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை தொழிற்சாலை கள் மற்றும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

தேயிலை தொழிற்சாலை களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள தேயிலை ஏல மையத் திற்கு கொண்டு வரப்படுகிறது. கம்பெனி தேயிலை எஸ்டேட் தொழிற் சாலைகள் தயாரிக்கும் ஆர்தோடக்ஸ் தேயிலை தூளும், சிறு தேயிலை தொழிற் சாலைகள் தயாரிக்கும் சி.டி.சி. தேயிலை தூளும் ஏலத்திற்கு விற்பனைக்கு கொண்டு வரப் படுகின்றன.

வர்த்தகர்கள்

இந்த இரு வகை தேயிலை தூளிலும் இலை ரகமும், டஸ்ட் ரகமும் தனித்தனியாக ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கு பெறுகின்றனர்.

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தேயிலை ஏலத்தில் பங்குபெற முடியும். பெரும்பாலும் வாரத்தில் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது.

*தேயிலை ஏலத்தில் தேயிலை தூளின் விற்பனை விலையை கொண்டே சிறு தேயிலை விவசாயிகள் வழங்கும் பச்சை தேயிலைக்கு விலை வழங்கப் படுகிறது. இதனால் தேயிலை ஏல மையத்தில் தேயிலையின் விற்பனை விலையை அறிந்து கொள்வதில் தொழிற்சாலை கள், பச்சை தேயிலை ஏஜெண்டுகள் அதிக ஆர்வம் காட்டுவது உண்டு.*

*தேக்கம்*

*கடந்த 2008–ம் ஆண்டில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் வறட்சி நிலவியதால் தென்னிந்திய தேயிலை தூளுக்கு அதிக கிராக்கி நிலவியது. அந்த கால கட்டத்தில் தேயிலை தூளுக்கு 5 ரூபாய் முதல்10 ரூபாய் வரை விலை உயர்வு இருந்தது. இதனால் பச்சை தேயிலைக்கு 20 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் வறட்சி நீங்கிய உடன் தென்னிந்திய தேயிலைக்கு கிராக்கி குறைந் தது. கடந்த 1¼ ஆண்டு கால மாக தேயிலைக்கு விலை வீழ்ச்சி தேயிலை ஏல மையத் தில் இருந்து வருகிறது.*

*கடந்த வாரம் நடைபெற்ற விற்பனை எண் 44–க்கான ஏலத்தில் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 3 ரூபாய் விலை குறைந்து 30 சதவீதம் தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. தேயிலை வர்த்தகர்கள் தீபாவளி முடிந்த பின்பு தான் புதிய கணக்கை தொடங்குவார்கள் என்றும், அதனால் தான் விற்பனை எண் 44–க்கான ஏலத்தில் ரூ.2 கோடி மதிப்பிலான தேயிலை தூள் தேக்கம் அடைந்தது என்று கூறப்படுகிறது.*

*விலை உயருமா?*

*தீபாவளி பண்டிகை கடந்த வாரம் முடிந்து விட்டது. தீபாவளிக்கு பின்னர் நடை பெறும் முதல் தேயிலை ஏலம் இன்று (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இந்த ஏலத் திற்கு 12 லட்சத்து 18 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்துள் ளது. இன்றும், நாளையும் நடைபெறும் தேயிலை ஏலத் தின் விலையில் முன்னேற்றம் இருக்குமா? என்ற எதிர்பார்ப்பு பச்சை தேயிலை ஏஜெண்டுகள், விவசாயிகள் மத்தியில் உள்ளது. ஏலத்தில் பங்கு பெறும் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்களின் மத்தி யில் போட்டி இருந்தால் நிச்சயம் விலை உயர்வு ஏற் படும் வாய்ப்பு உள்ளது.எனவே தேயிலை ஏலத்தில் தேயிலை தூளுக்கு விலை உயர்வு இருக்குமா? என்ற எதிர்பார்ப்பு அதிக அளவில் நிலவி வருகிறது.*

# வேளாண்மை செய்திகள்

## நிலக்கடலை பயிருக்கு நீர்பாசனம் - ஒரு விளக்கம்

நிலக்கடலை பயிருக்கு சரியான அளவில் நீர்பாசனம் அளிப்பது பற்றி தெரிந்து கொள்வதன் மூலம் நல்ல மகசூலை பெறலாம். கடலையில் வளர்ச்சி பருவங்கள் மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த பருவங்களுக்கு தக்கபடி நீர்பாசனம் செய்வது அவசியம். முக்கிய பருவங்களான பூக்கும் பருவம், விழுது இறங்கும் பருவம், காய் பெருக்கும் பருவம் ஆகிய மூன்று பருவங்களில் நீர் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த பருவங்களில் நிலக்கடலை பயிருக்கு மொத்தம் 8 பாசனங்கள் அளிக்க வேண்டும்.



விதைத்த முதல் நாளில் ஒரு பாசனமும், 3 முதல் 5 வது நாட்களுக்கு இடையில் இரண்டாவது பாசனமும், 25 நாட்களுக்குள் மூன்றாவது பாசனமும், பூக்கும் தருணத்தில் அதாவது 26 முதல் 60 நாட்களுக்குள் இரண்டு முறையும், விழுது விடும் பருவத்தில் இரண்டு முறையும் பாசனம் செய்ய வேண்டும். மண்வாகு தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப எட்டாவது முறையாக ஒரு நீர்ப்பாசனமும் அளிக்கலாம்.

தேங்காய் நார்கழிவு எக்டருக்கு 10 மெட்ரிக் டன் அளவில் கடைசி உழவிற்கு முன் இடுவதால் நிலத்தில் பொறபொறப்பு உயர்ந்து விழுதுகள் பெருமளவில் கடலையாக உருவாகின்றன.

இத்துடன் மண்ணில் நீர் பிடிப்பு அதிகமாகி பாசன இடைவெளி கோடையில் 10 நாட்களுக்கு பதிலாக 15 நாட்களாகவும், ஜனவரி செப்டம்பர் மாதங்களில் 12 நாட்களுக்கு பதிலாக 18 நாட்களாகவும் அமையலாம்.

## மானாவாரியில் பருத்தி நடவு தொழில் நுட்பங்கள்

மானாவாரியில் பருத்தி நடவு செய்து பலன் பெற நினைக்கும் விவசாயிகள் சில எளிய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் அதிக மகசூலை பெறலாம். குறிப்பாக வேரழுகல் நோய்,வாடல் நோய், இலைக்கருகல் நோய் என பல்வேறு நோய்களிலிருந்து காத்துக் கொள்ள விதைநேர்த்தி செய்வது முக்கியம்.



இதனால் விதை முளைக்கும் போது பூசண வித்துக்களும் முளைத்து நோய்களை உண்டாக்கி சேதம் விளைவிப்பது தடுக்கப்படுகிறது.

### விதை நேர்த்தி

பருத்தி விதைக்கும் முன்னர் விதை நேர்த்தி செய்தல் அவசியம். ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனஸ் புளூரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதைப்பதற்கு சற்று முன்னர் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

சம வயதுள்ள ரகத்தை தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் விதைத்திட வேண்டும்.

தொழுஉரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன் வண்டு, தரைக்கூன் வண்டு ,வேர்ப்புழு போன்ற நோய்களை தடுக்கும்.

வயலைச் சுற்றிலும் உள்ள பூச்சிகளுக்கு மாற்று உணவாக பயன்படும் செடிகள், களைகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

நன்மை தரும் பூச்சியான பொறிவண்டுகளின் பெருக்கத்திற்கு ஊடுபயிராக தட்டைப்பயிறு பயிரிட வேண்டும்.

ஓரப்பயிராக ஆமணக்கு பயிரிட வேண்டும். அதன் மூலம் புரடீனியா புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். புரடீனியா புழுக்களின் தாய் அந்துக்களை கவர்ந்து முட்டையிட வைக்கும். முட்டைகளும், இளம் புழுக்களும் உள்ள ஆமணக்கு இலைகளை பறித்து அழிக்க வேண்டும்.

கிரைசோப்பா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்காக ஊடு பயிராக 20 சால் பருத்திக்கு ஒரு சால் மக்காச்சோளம் பயிரிட வேண்டும்.

இந்த முறைகளை கையாண்டால் பருத்தி பயிரில் நல்ல மகசூலை பெறலாம்.

**சிக்கன நீர் பாசனம் மூலம்**

## ஒரு ஏக்கர் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி

ஈரோடு மாவட்டம் பள்ளிபாளையம் வட்டாரம் தெற்குபாளையம் கிராமத்தில் வசித்துவருபவர் விவசாயி நடனசபாபதி. இவர் தனது தோட்டத்தில் நெல், கரும்பு சாகுபடி செய்து வருகிறார். தற்போது ஒரு ஏக்கர் நிலத்தில் செம்மை நெல் சாகுபடியை மேற்கொண்டு அதிக லாபம் அடைந்துள்ளார்.

இது குறித்து விவசாயி நடனசபாபதி கூறியதாவது:-

### விதை நாற்றாங்கால்

எனது தோட்டத்தில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தை செயல்படுத்த அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகினேன். வேளாண் விரிவாக்க துறை அலுவலர் செம்மை நெல் சாகுபடி, நாற்றுநடவு செய்யும் முறை மற்றும் அதன் தொழில்நுட்பம் குறித்து விளக்கி கூறினார். அவரது ஆலோசனை படி செம்மை நெல் நடவு செய்ய முதலில் நாற்றாங்கால் அமைத்தேன்.

இந்த நாற்றாங்காலில் 3 கிலோ நெல் விதையை பயன்படுத்தி விதை விதைத்தேன். விதை விதைத்த 14 நாட்களில் நல்ல செழிப்பான செம்மை நெல் நாற்றுகள் முளைத்து இருந்தன. இதற்காக நடவு வயலை துல்லியமாக பராமரித்து வந்தேன்.

### சதுர நடவு

அதன் பின்னர் நெல் நாற்று நடவு செய்ய ஒரு ஏக்கர் நிலத்தை நன்கு சமன் படுத்தி வயலை தயார் செய்தேன். இந்த வயலில் நடவு அடையாளம் இடும் கருவியை பயன்படுத்தி முக்கால் அடி இடைவெளியில் இரண்டு புறமும் நெல்பயிர் வளருமாறு சதுர நடவு மேற்கொண்டேன். இதை மேற்கொள்ளும் போது நன்கு வேர் பிடித்து வளர்ந்த நெல் நாற்றை நடவு வயலில் இருந்து ஒவ்வொன்றாக பிடுங்கி மேலாக நடவு செய்தேன். நாற்று நட்டு 10–ம் நாளில் நெல் பயிர் நன்றாக வளர்ந்து இருந்தது. பயிர் வளர்ச்சிக்காக களைக் கொல்லி மருந்து எதையும் தெளிக்கவில்லை.

### சிக்கன நீர் நிர்வாகம்

நாற்றுகள் நன்றாக வளர்ந்த நிலையில் வயலில் அதிக களை முளைத்து இருந்தது. இந்த களைகளை கோனோவீடர் என்ற உருளை கருவியை கொண்டு முன்னும், பின்னும் இழுத்து முளைத்த களைகளை அப்படியே வயலில் மடித்து மண்ணில் புதைத்து மக்க வைத்தேன். நன்கு மக்கிய களைகள் வயலுக்கு நன்கு உரமாக பயன்பட்டது.

நெல் வயலுக்கு தேவையான நீரை காய்ச்சலும், பாய்ச்சலும் என்ற முறையில் பாய்ச்சினேன். இதற்காக சிக்கனமான நீர் பாசன முறையை மேற்கொண்டேன். இது நெல் பயிர் வளர்வதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. மேலும் இதற்கு தேவையான உரங்களை சரியான தருணத்தில் இட்டேன். இதன் காரணமாக செம்மை நெல் நாற்றுகள் நன்கு செழிபாக வளர்ந்து இருந்தது. மேலும் நாற்றுக்களில் சூரிய ஒளி நன்றாக பட்டதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இன்றி காணப்பட்டது. மேலும் பூச்சி மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்தவில்லை. ஒவ்வொரு கதிரிலும் நெல் மணிகள் சுமார் 150 முதல் 200 வரை இருந்தது.

### அதிக விளைச்சல்

அறுவடை வரை நெல் பயிர் பச்சையாகவும், கதிர்கள் சாயாமலும் இருந்தது. அதன் பின்னர் அறுவடை மேற்கொண்டேன். ஒரு ஏக்கர் நிலத்தில் 61 மூட்டைகள் அதாவது 4 ஆயிரத்து 575 கிலோ விளைச்சல் கிடைத்தது. இந்த செம்மை நெல் சாகுபடியில் விதையளவும், பூச்சி மருந்து செலவும் குறைவாக இருந்ததால் சாகுபடி செலவும் மிக குறைவாகவே இருந்தது.

எல்லா செலவுகளும் போக ஒரு ஏக்கரில் நிகர லாபமாக ரூ.18 ஆயிரம் கிடைத்தது. இந்த சாகுபடி மூலம் நெல் பயிரும் ஒரு பணப்பயிர்தான் என்பதை அறிந்து கொண்டேன். எனது தோட்டத்துக்கு அருகாமையில் உள்ள விவசாயிகளும் எனது வயலை பார்வையிட்டு அவர்களும் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி வருகிறார்கள்.

இவ்வாறு விவசாயி நடனசபாபதி கூறினார்.